# நாடி

Pulse of the Singapore Muslim Community

நாடி 22 ஹிஜ்ரி 1435 ரபுவுல் அவ்வல் ஜனவரி 2014

இலவசம்


# நபிவழி நம்வழி நலம் தரும் திருவழி



# சேவைச் செம்மல் எஸ்.எம். அப்துல் ஜலீல்




தொழிலதிபர், புரவலர், சமூக ஆர்வலர் முதலான பன்முனைச் சிறப்புக்குரிய அல்ஹாஜ் எஸ்.எம். முகம்மது அப்துல் ஜலீல் இரண்டு அரிய விருதுகளை 2013ல் பெற்றுள்ளார்.

மினி என்வைரான்மென்ட் சர்வீஸ் நிறுவன குழுமங்களின் (MES) நிர்வாக இயக்குநரான ஜலீல் ஆற்றிவரும் சமூக நற்பணிகள் நாடறிந்தவை. பென்கூலன் பள்ளிவாசல் நிர்வாகக் குழு, நாகூர் தர்கா மரபுடைமை நிலைய நிர்வாகக் குழு முதலானவற்றின் தலைவரான அவர் பல்வேறு சிறப்பு விருதுகளைப் பெற்றுள்ளார். இஸ்லாமிய சமய மன்றம்-முயிஸ் ஹாஜி ஜலீல் அவர்களுக்கு இவ்வாண்டுக்கான நற்சேவை விருதை வழங்கியிருக்கிறது. முஸ்லிம் சமூக முன்னேற்றத்திற்கு முன்னுதாரணமாக அமைந்து பல்வகைத் தொண்டூழியங்களைச் செய்து வருபவர்களைக் கவுரவிப்பதற்காக 12 ஆண்டுகளாக இந்த விருதை முயிஸ் அளித்து வருகிறது. அதிபர் டோனி டான், இன்டர் கான்டினென்டல் ஹோட்டலில் நடைபெற்ற விழாவில், ஆறு பேருக்கு தொண்டூழிய விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

சிங்கப்பூர் முஸ்லிம்களின் வளர்ச்சிக்கு ஹாஜி அப்துல் ஜலீலைப் போன்ற தன்னலமற்றவர்களின் பங்களிப்பு முக்கிய காரணமாக இருக்கிறது. அவர்களின் அயராத உழைப்பினால் புதிய சாதனைகளை நாம் கண்டு வருகிறோம். வசதிகுறைந்த பல குடும்பங்கள் இதன்மூலம் பயனடைந்துள்ளது பாராட்டுக்குரியது என்று முயிஸ் தலைவர் அலமி மூஸா தமது உரையில் சிறப்பித்தார்.

“பல விருதுகளைப் பெற்றிருப்பினும் விருதையோ அங்கீகாரத்தையோ எதிர்பார்த்து நான் உதவியதில்லை. அதைக் கடமையாகக் கருதி செயல்பட்டு வருகிறேன் அதனால் நான் எதிர் பார்த்திராத ஒரு விருது இது. ஒரு சமுதாய அங்கீகாரமாக இதனைக் கருதி மகிழ்கிறேன்” என்றார் புரவலர் அப்துல் ஜலீல்.

## தப்லா விருது

ஜலீல் அவர்களின் சமூகத் தொண்டைப் பாராட்டி இவ்வாண்டுக்கான தப்லா சமூக வெற்றியாளர் விருது வழங்கப்பட்டது.

பிரதமர் அலுவலக அமைச்சரும், வர்த்தக தொழில் இரண்டாம் அமைச்சருமான எஸ். ஈஸ்வரன், சாங்கி எக்ஸ்போ அரங்கில் நடைபெற்ற விழாவில் அந்த விருதை அளித்துச் சிறப்பித்தார். விருதுடன் 10,000 வெள்ளிக்கான காசோலையும் வழங்கப்பட்டது. சமூகத்தின் வசதி குறைந்தவர்ளுக்கு உதவுவதில் முன்மாதிரியாக இருக்கும் ஒருவருக்கு விருதும் நன்கொடையும் வழங்குவது பாராட்டுக்குரியது என்று மகிழ்ச்சி தெரிவித்தார் அவர்.

தப்லா விருது கடந்த மூன்றாண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது. ஹாஜி அப்துல் ஜலீல் அந்தத்தொகையை சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கமான சிண்டாவுக்கு நன்கொடையாகத் தந்தார்.

## பிபிஎம்-PBM விருது

தொழிலதிபர் எஸ்.எம். அப்துல் ஜலீல் 2005ஆம் ஆண்டில் பிபிஎம்-PBM பொதுச்சேவை

# மெய்தீன் என்ற மாமனிதர்

## நூல் வெளியீட்டு விழா

டாக்டர் ஹிமானா சையத் எழுதிய மெய்தீன் என்ற மாமனிதர் (Maideen - a great man) எனும் நூல் வெளியீட்டு விழா 29.09.2013 ஞாயிற்றுக்கிழமை மாலை உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு விழா ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் மு.அ. மசூது தலைமை வகித்தார். உ.ஹ. அப்துல் ஹமீது தமிழ் வாழ்த்திசை வழங்கினார்.

“சக்திமிக்க ஒரு சகாப்தமாக விளங்கியவர் ஏ.என். மெய்தீன் அவர்கள். வாழ்வின் சுகங்களை எல்லாம் துறந்து முழுக்கமுழுக்க வாழ்க்கையை பொதுநலத்திற்காகவே அர்ப்பணித்த சீலர் ஏ.என்.மெய்தீன். தென்கிழக்காசியாவின் ஒரே தமிழ் உயர்நிலைப் பள்ளியான உமறுப்புலவர் உயர்நிலைப் பள்ளியை நிர்மாணித்துத் தமிழ்க்கல்வி வரலாற்றில் நிரந்தர இடத்தைப் பெற்றவர் அவர். அவருடைய சாதனைகளை விரிவாக வரைந்திருக்கிறார் நூலாசிரியர் ஹிமானா சையத்” என எடுத்துரைத்தார் மு.அ. மசூது.

உமறுப்புலவர் கல்வி உதவி அறங்காவல் நிதி அமைப்பின் ஆலோசகர் எஸ். விவேகானந்தன் மற்றும் சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் அமைப்பின் தலைவர் நசீர் கனி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க சிங்கப்பூர் கிளையின் தலைவர் முனைவர் எம்.ஏ. காதர் நூல் சிறப்புரை வழங்கினார்.

நாணயமாற்று வணிகர் சங்க தலைவர் மு. ஜஹாங்கீர், தமிழ் எழுத்தாளர் சங்க தலைவர் நா. ஆண்டியப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சிறப்பு விருந்தினர் சிங்கப்பூர் நாடாளுமன்ற நியமன உறுப்பினர் ஆர். தினகரன் நூலை வெளியிட்டு உரையாற்றினார்.

நூலாசிரியர் டாக்டர் ஹிமானா சையத் ஏற்புரை நிகழ்த்தினார். நிகழ்வின் நெறியாளராக தமிழாசிரியர் மீனாட்சி பங்கேற்றார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், உமறுப்புலவர் கல்வி உதவி அறங்காவல் நிதி, உமறுப்புலவர் தமிழ் உயர்நிலைப் பள்ளி முன்னாள் மாணவர் சங்கம் ஆகியவை செய்தன.

நூல் வெளியீட்டின் மூலம் திரட்டப்பட்ட தொகை யாவும் ஆண்டுதோறும் பெரியவர் ஏ.என். மெய்தீன் பெயரில் கல்வி உதவி நிதியாக மாணவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

---

நட்சத்திர விருது பெற்றார். அந்த ஆண்டு தேசிய தினத்தின் போது அதிபரின் அந்த விருது அவருக்கு வழங்கப்பட்டது. ஜலீல் அவர்களின் நற்பணிகளுக்குரிய அங்கீகாரமே PBM பொதுச்சேவை விருது.

ஹாஜி அப்துல் ஜலீல் 2009ல் சிங்கைச் சீதக்காதியார் விருதைப்பெற்றார். சிங்கப்பூர் இந்தியக் கலைஞர் சங்கம் முக்கனி விருந்து எனும் நிகழ்ச்சியில் அந்த விருதை வழங்கிச் சிறப்பித்தது. தமது கொடைத் தன்மையால் அபரிமிதமாக அள்ளிக் கொடுத்து அரவணைக்கும் அவருடைய பண்பைப் பாராட்ட இவ்விருது வழங்கப்படுவதாக சங்கத் தலைவர் ச. வரதன் பாராட்டுரையில் மகிழ்ச்சி தெரிவித்தார்.

பணத்தால் மட்டுமின்றி பிறருடைய கவலைகளுக்கும் தேவைகளுக்கும் செவி சாய்ப்பதுடன் அவற்றுக்கான ஆலோசனை களை வழங்குவதும் ஒரு விதத்தில் உதவியே ஆகும் என்கிறார் எஸ்.எம். ஜலீல். வசதி குறைந்தவர்களின் தேவையை நிவர்த்தி செய்வதுடன் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்கும் இவர் முக்கியத்துவம் அளித்து வருவதை சமூகம் பாராட்டுகிறது.

# கடையநல்லூர் முஸ்லிம் லீக் குடும்பதின விழா



சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் அதன் குடும்பதின விழா, 24.11.2013 ஞாயிற்றுக்கிழமை லெப்ரடார் பூங்காவில் நடைபெற்றது. அதில் ஆயிரம் பேர் வரை கலந்துகொண்டனர். 35 ஆண்டுகளாக இச்சங்கம் குடும்பதின விழாவை நடத்தி வருகிறது.

பாசிர்ரிஸ்-பொங்கோல் குழுத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெனில் புதுச்சேரி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். பல இன, பல கலாசாரங்களைக் கொண்ட சிங்கப்பூரில் நமது மரபுகளைக் கட்டிக் காக்கும் வேளையில், மக்களுக்குப் பயனளிக்கும் சேவைகளை நாம் தொடர்ந்து செய்துவர வேண்டும்; அது நமது கடப்பாடு என்று தமது உரையில் அவர் குறிப்பிட்டார்.

பிறருக்கு உதவுவதைத் தொண்டூழிய மாகத் தொடரும்படி குடும்பதின விழாவில் பங்கேற்ற அனைவரையும் ஜெனில் புதுச்சேரி கேட்டுக் கொண்டார்.

சமூகநலப் பணிகளில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள தொண்டூழியர் களில் 30 பேருக்கு கடையநல்லூர் சங்கத்தின் சார்பில் அங்கீகாரச் சான்றிதழ்களை அவர் வழங்கினார்.

மெண்டாக்கியின் உதவிகளும் சேவைகளும் சிங்கப்பூர் இந்திய முஸ்லிம்களைச் சரியான அளவுக்கு எட்டும்படிச் செய்த அதன் தலைமை நிர்வாக அதிகாரி திருவாட்டி மோலியா ஹாஷிம் இந்த விழாவில் கவுரவிக்கப்பட்டார்.

குடும்பப் பிணைப்பை வலுப்படுத்தும் நோக்கில் பற்பல நிகழ்ச்சிகளை கடையநல்லூர் முஸ்லிம் லீக் ஏற்பாடு செய்திருந்தது. சிறார்கள் முதல் மூத்தோர் வரை அதிகமானோர் அவற்றில் கலந்து கொண்டனர். கல்வி, கேளிக்கை, பொழுதுபோக்கு அங்கங்களும் அவற்றுள் அடங்கும்.

மேடை நிகழ்ச்சிகளில் அதிகமான இளையவர்கள் பங்கேற்று அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினர். குறிப்பாக புதிய குடும்ப உறுப்பினர்களுக்கு அவை மிகுந்த உற்சாகத்தை அளித்தன.

குடும்பதின விழாவில் கலந்து கொண்டவர்களுக்கும் ஒத்துழைப்பு நல்கியவர் களுக்கும் கடையநல்லூர் முஸ்லிம் லீக் நிர்வாகிகள் நன்றி பாராட்டி நல்லன்பைத் தெரிவித்துக் கொண்டனர்.

# முஹிய்யத்தீன் அப்துல் காதருக்கு “டாக்டர் பட்டம்”

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம் சிங்கப்பூர் கிளையின் தலைவரும், டி.என்.ஹெச். கன்சல்டன்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான ஹாஜி முஹிய்யத்தீன் அப்துல் காதர் டாக்டர்- முனைவர்- பட்டம் பெற்றுள்ளார்.

அவர் மேலாண்மைத் துறையில் ஆய்வு செய்ததை அங்கீகரித்து, பாரதிதாசன் பல்கலைக்கழகம் "டாக்டர் பட்டம்" வழங்கியிருக்கிறது. 25-11-2013 அன்று



# தெ.மு.ந.ச. மதரஸா ஆண்டு விழா



சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் அதன் அல் மதரஸா நூருல் இஸ்லாமின் ஆண்டுவிழாவை சிறப்பாகக் கொண்டாடியது.

சுல்தான் பள்ளிவாசல் இணை மண்டபத்தில் நடைபெற்ற விழாவை சங்கத்தின் தலைவர் ஹாஜி ஹசன் குத்தூஸ் தலைமையேற்று நடத்தினார். செயலாளர் ஹாஜி பஹ்ருதீன் வரவேற்புரையுடன் தொடங்கிய விழாவில் தஞ்சோங் பகார் குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சியா ஷி லூ சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் 2012ஆம் ஆண்டு பொதுத்தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கல்வி உபகாரநிதியை வழங்கி உரையாற்றினார்.

சமாதான நீதிபதி சான்றிதழ் விருது பெற்ற மூத்த ஆசிரியர், கடையநல்லூர் முஸ்லிம் லீக் தலைவர் ஹாஜி நசீர் கனி அவர்களை தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் இவ்விழாவில் சிறப்பித்தது.

அல் மதரஸா நூருல் இஸ்லாம் மாணவர்கள், கிராஅத் ஓதுதல், நஷித் பாடுதல், திக்கிர் பாராத் மற்றும் இஸ்லாமிய கேள்வி-பதில், துஆ மனனம் போன்ற பலவகையான படைப்புகளை நிகழ்த்தினர். பல உலமாக்களின் சிறப்புரைகளும் இடம் பெற்றன.

தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கத்தின் துணைத் தலைவர் ஹாஜி முகம்மது ஜாஃபரின் நன்றியுரை, சங்க உஸ்தாத் அசன் அலி பைஜியின் துஆ ஆகியவற்றுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

---

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், தமிழக ஆளுநரும் பல்கலைக்கழகத்தின் வேந்தருமாகிய மேதகு திரு. கே. ரோசய்யா டாக்டர் பட்டத்தை வழங்கினார்.

சிங்கப்பூரில் 22 ஆண்டுகளாக கணக்காய்வாளராகப் பணியாற்றி வரும் அப்துல் காதர், இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, அயர்லாந்து போன்ற நாடுகளிலுள்ள சர்வதேசப் பல்கலைக்கழகங்கள் சிங்கப்பூரில் நடத்திவரும் பட்டப் படிப்புகளுக்கு கடந்த 19 ஆண்டுகளாக பகுதிநேரப் பேராசிரியராகவும் பணியாற்றி வருகிறார்.

நாகூரில் ஒரு கலைக்குடும்பத்தில் பிறந்த இவரது பெரிய அன்னை சித்தி ஜுனைதா பேகம், தமிழில் முதல் முஸ்லிம் பெண் எழுத்தாளர் என்ற பெருமைக்குரியவர்.

---

## நபி மொழி

### பெற்றோரைப் பேணுங்கள்

“பெற்றோர்களுக்கு மனம் நிறைந்து சேவை செய்யுங்கள். இறைவன் இந்த வாய்ப்பை உங்களுக்கு அளித்திருக்கிறான். ஏனெனில், உங்களை சுவர்க்கவாதிகளின் பட்டியலில் சேர்ப்பதற்காக. இன்னும் அதிகமான இறை பொருத்தத்தை பெறுவதற்காக. பெற்றோருக்கு சேவை புரிவதில் தான் மறுமையில் வெற்றியும், நன்மைகளும் கிடைக்கின்றன. மேலும், மனிதன் ஈருலக ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பு பெறுகிறான்.”

ஆதாரம்: அத்தர்கீப் வத்தர்ஹீப் நூல்

# சமாதான நீதிபதி ஹாஜி நசீர் கனி

மூத்த கல்வியாளரும் கடையநல்லூர் முஸ்லிம் லீக் தலைவருமான அல்ஹாஜ் நசீர் கனி சமாதான நீதிபதியாக நியமனம் பெற்றுள்ளார். அதிபர் டோனி டான் அதற்குரிய சான்றிதழை அண்மையில் வழங்கினார்.

ஹாஜி நசீர் கனி மாணவப் பருவம் தொட்டே சமூக அக்கறை கொண்டவர். அவர் தமது *31* வயதிலேயே கடையநல்லூர் முஸ்லிம் சங்கத்தின் தலைவர் பொறுப்பை ஏற்றார். அதற்குமுன் மூத்த வயதினரே அதன் தலைவர் பொறுப்பை வகித்தனர்.

இந்திய முஸ்லிம் பேரவை, வளர்தமிழ் இயக்கம் ஆகியவற்றின் துணைத்தலைவருமான ஹாஜி நசீர் கனி கடந்த இருபது ஆண்டுகளாக பல்வேறு சமூக அமைப்புகளின் மூலம் பலதரப்பட்ட சமூக நற்பணிகளைச் செய்து வந்துள்ளார். அதன் மறுபரிமாணமாகவே அவருக்கு சமாதான நீதிபதி சான்றிதழ் வழங்கப்பட்டிருக்கிறது என ஊடகங்கள் பாராட்டின.

தொழில்துறை, பொதுத்துறை, சமூகத்துறை ஆகியவற்றில் அரிய சேவையாற்றிய சிங்கப்பூரர்களை அங்கீகரிக்கும் சிறப்பு அம்சமாக சமாதான நீதிபதி சான்றிதழ் விருதை அதிபர் வழங்கி வருகிறார்; அவர்கள் ஐந்தாண்டு காலம் சேவையாற்ற வேண்டும். சிறைச்சாலை வசதிகளைப் பார்வையிட்டு அறிக்கை தயாரிப்பது, கீழ் நீதிமன்றங்களில் நடைபெறும் சமரசப் பேச்சு வார்த்தைகளில் நடுவர் பங்கு வகிப்பது, சட்டபூர்வ திருமணங்களை நடத்திவைப்பது போன்ற பொறுப்புகளை அவர்கள் ஏற்கவேண்டும். ஹாஜி நசீர் கனி வெஸ்ட் கோஸ்ட் சமூகநிலைய இந்திய நற்பணிக் குழுவின் தலைவராகவும், சிண்டாவின் மேலாண்மைச் செயற்குழு உறுப்பினராகவும் இயங்கி வருகிறார். முயிஸ் அமைப்பிலும் அவர் அங்கம் வகித்து வருகிறார்.

சமாதான நீதிபதி விருது தமது சமூக நற்பணிச் சேவைக்குரிய அங்கீகாரம் என்று கருதி மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்த அவர், தமது தொண்டூழியம், தொய்வில்லாமல் மென்மேலும் தொடரும் என்று உறுதி தெரிவித்தார்.



தமிழ்மொழி பண்பாட்டுக் கழகம், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கம், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம், இந்திய முஸ்லிம் பேரவையின் உறுப்பு அமைப்புகள் உள்ளிட்ட சங்கங்களும், முக்கிய வர்த்தக, தொழில் நிறுவனங்களும் சமாதான நீதிபதி விருது பெற்ற ஹாஜி நசீர் கனிக்கு மனமார்ந்த பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டன.

### விருதுகள்

ஹாஜி நசீர் கனி பெற்றுள்ள விருதுகள் பற்பல. சாதனையாளர்களுக்குரிய ஜாஸாபக்தி (Jasa Bakti) விருது *2005*ஆம் ஆண்டில் அவருக்கு வழங்கப்பட்டது. முன்னாள் அதிபர் எஸ்.ஆர். நாதன் அந்த விருதை அளித்தார். ஜாஸாபக்தி நமது சமுதாயத்திற்கு வழங்கப்பட்ட விருது என அப்போது அவர் நன்றி பாராட்டினார்.

சிங்கப்பூர் இந்திய அமைப்புகள் காலத்திற்கு ஏற்றவாறு குறிப்பாக, இளையர் முன்னேற்றத்திற்கு ஏற்ற செயல் திட்டங்களை மேற்கொள்ளவேண்டும் என்று சமாதான நீதிபதி நசீர் கனி பரிந்துரைத்துள்ளார். தமிழ்மொழி, கலாசாரம் சார்ந்த நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் அதே வேளையில், சுகாதாரம், திருமண உறவு, விவாக ரத்தை தவிர்க்கும் வழிமுறைகள் மற்றும் தொழில்நுட்பம் போன்ற வாழ்வியல் முறைகள் தொடர்பான நிகழ்ச்சிகளை இந்திய அமைப்புகள் ஏற்பாடு செய்வது அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.

# PHOTO NEWS

# படச் செய்திகள்



Mosque Management Board (MMB) Investiture, 16 Nov 2013



Zikral Hijrah celebration 1435H at Khadijah Mosque, 4 Nov 2013



Hari Raya Eidul Adha prayers at Darul Makmur Mosque, 15 Oct 2013



Eidul Adha Qurban Rites - Canadian lambs imported in addition to Australian lambs



6th Rahmatan Lil'Alamin (blessings for all) at Singapore Botanical Gardens, 29 Sep 2013



Mr. Nouman Ali Khan at 6th instalment of Youth aLive discourse at Suntec City, 7 Sep 2013



Sister Theresa Seow delivering the 3rd Abdul Aleem Siddique Memorial Lecture at SIH, 6 Sep 2013



Legal forum for Asatizah at The Subordinate Courts of Singapore, 31 Aug 2013

# ரிஃபாயி தரீக்கா சங்க 48ஆம் ஆண்டு விழா

சிங்கப்பூர் ரிஃபாயி தரீக்கா சங்கம் அதன் 48ஆம் ஆண்டு விழாவையும், ஹலரத் சுல்தானுல் ஆரிஃபீன் ஷெய்க் சையது அஹமது கபீர் ரலி அவர்களின் 856ஆம் ஆண்டு நினைவையும் கொண்டாடியது. நவம்பர் 17, முஹர்ரம் 13 காலை மணி 10.30க்கு அப்துல் கபூர் பள்ளிவாசல் அடித்தள அரங்கில் விழா நடைபெற்றது.

சிங்கப்பூர் ரிஃபாயி தரீக்கா சங்கம் 1965ஆம் ஆண்டில் தாம்சன் சாலையில் தொடங்கப்பட்டதை அறிவோம். பிறகு புதுப்பிக்கப்பட்ட வளாகத்தில் 35ஆம் ஆண்டு விழாவும் ஆரிபு நாயகம் அவர்களின் 843ஆம் ஆண்டு நினைவு நாள் விழாவும் நடைபெற்றன.

மவ்லூதுடன் தொடங்கிய இவ்வாண்டு விழாவில் பயன்மிக்க பலசொற்பொழிவுகள் இடம்பெற்றன.

சங்கத்தின் தலைவர் ஹாஜி ஏ.ஜி முஹம்மது முஸ்தபா வரவேற்புரை நிகழ்த்தினார். அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வழியில் மார்க்க, சமூக நற்பணியாற்றிய ஞானச்செம்மல் ஆரிபு நாயகரின் மாண்பைப் போற்றும் நல்விழாவாக இது அமைந்தது.

ஹாஜி பி.எம். அப்துல் சலாம், இமாம்



உமர் ரில்வான் ஜமாலி, மவ்லவி அல்ஹாஜ் ஹாபிஸ் ஷாகுல் ஹமீது ஆகியோரின் தமிழ் உரைகளைத்தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உஸ்தாத் ஹாஜி ஹபீப் ஹசன் அல் அத்தாஸ் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினார். ரிஃபாயி நாயகரின் நல்லுபதேசங்களையும் நன்னெறிக் கோட்பாடுகளையும் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தனர்.

உரைகள் நிறைவு பெற்றதையடுத்து, பிற்பகல் ஒருமணிக்கு துஆ ஓதப்பட்டது. லுஹர் தொழுகைக்குப் பிறகு ரிஃபாயி தரீக்கா சங்க நிர்வாகம் அனைவருக்கும் மதிய உணவு வழங்கியது.

# எதிர்கால சமூக உருவாக்கம், சாதனைத் திறன் ஆய்வரங்கு

சிங்கப்பூர் தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் இந்திய முஸ்லிம் நிபுணத்துவ அமைப்பினருடன் இணைந்து நமது எதிர்கால உருவாக்கம், சாதனைத் திறன்-2013 குறித்த ஆய்வரங்கை நடத்தியது. சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக் கழகக் கருத்தரங்க அறையில் 9.11.2013 அன்று நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், நமது இளைய தலைமுறையினரின் திறன் வளர்ச்சிக்கும் இந்திய முஸ்லிம் சமூக முன்னேற்றத்திற்கும் உறுதுணையான பல அம்சங்கள் ஆராயப்பட்டன

இந்திய முஸ்லிம் சமூக முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு நாம் செயல்படவேண்டும். நடப்பு விவகாரங்களையும், நமது பிரச்சினை



களையும் அடையாளம் கண்டு, அணுகி ஆராய்ந்து அவற்றுக்குத் தீர்வுகாண வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டது. அதற்கான பல

# எழுத்தாளர் ஜே.எம். சாலிக்கு உமறுப்புலவர் விருது

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக், உமறுப்புலவர் முன்னாள் மாணவர் சங்கம், உமறுப்புலவர் அறங்காவல் நிதி ஆகிய அமைப்புகள் எழுத்தாளர் அல்ஹாஜ் ஜே.எம். சாலி அவர்களுக்கு உமறுப்புலவர் விருது வழங்கிச் சிறப்பித்துள்ளன.

தமிழ்மொழி விழாவையொட்டி பீட்டிசாலை உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் நடைபெற்ற உமறுப்புலவர் நினைவு அரங்கம் 2013 எனும் நிகழ்ச்சியில் அந்த விருது வழங்கப்பட்டது.

ஜே.எம். சாலி அவர்களின் தமிழ்மொழி, சமூகசேவையை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருதை வழங்கி கௌரவிப்பதாக கடையநல்லூர் முஸ்லிம் லீக் பொதுச்செயலாளரும், விழா ஏற்பாட்டுக் குழுத் தலைவருமான ஹாஜி மு.அ. மசூது தமது உரையில் குறிப்பிட்டார். செம்பவாங் குழுத்தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. விக்ரம் நாயர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

ஜே.எம். சாலியின் மொழி இலக்கியத் திறனைப் பாராட்டி சென்னைக் கம்பன் கழகம் முன்னதாக 2008ல் சீறா விருது வழங்கியது.

அவருக்கு சீறா ஈடுபாடு அதிகம். தமிழ்முரசு நாளிதழில் 1966ல் சீறாப் புராணம் உள்ளிட்ட காவியங்களை அறிமுகப்படுத்தும் கட்டுரைத் தொடரை எழுதினார். அதுவே 1978ல் இஸ்லாமியத் தமிழ்க் காவியங்கள் எனும் நூலாக வெளிவந்து பரவலான வரவேற்பைப் பெற்றது 'அற்புதமான அறிமுகம்' என கி.வா.ஜ. கலைமகளில் பாராட்டுரை எழுதினார்.

அடுத்தடுத்து பல சீறா நிகழ்ச்சிகள்.



எடுத்துக்காட்டாக, பாண்டிச்சேரி வானொலி நிலையம் நடத்திய சீறாப்புராணக் கருத்தரங்கு விழா! அந்தக் காவியம் 350 ஆண்டுகளுக்குமுன் அரங்கேறிய பறங்கிப்பேட்டை சீறா நினைவு மேடையில் நீதிபதி மு.மு. இஸ்மாயில் தலைமையில் வானொலி நிலைய இயக்குநர் கே.பி.எஸ். ஹமீது விழாவை நடத்தினார். 'உமறுவின் தனித்துவம்' சாலிக்குத் தரப்பட்ட தலைப்பு.

சென்னை புதுக்கல்லூரியில் 15 ஆகஸ்ட் 1976 நடைபெற்ற சீறாப்புராண ஆய்வரங்கில். 'உமறுவின் தனித்திறன்' எனும் கட்டுரையை ஜே.எம். சாலி வழங்கினார். ஆய்வரங்கை நடத்திய மீரா அறக் கட்டளை "சிந்தைக்கினிய சீறா" தொகுப்பில் அந்தக் கட்டுரையை வெளியிட்டது.

எழுத்தாளர் ஜே.எம். சாலிக்கு சென்னையில் இயங்கிவரும் தேவன் அறக்கட்டளை இவ்வாண்டுக்கான விருதை வழங்கியது. ஆனந்த விகடன் தொடக்க காலப் பொறுப்பாசிரியராக இருந்த தேவன் பெயரில் அளிக்கப்பட்டு வரும் நினைவுப் பதக்க விருது அது.

---

உத்திகள் ஆய்வரங்கில் பரிந்துரைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன.

நமது சமூக இளம் திறனாளர்களுடன் சிண்டா, மெண்டாக்கி அமைப்புகளைச் சேர்ந்த இளையர்களும் இந்த அரைநாள் ஆய்வரங்கில் மனநிறைவு தெரிவித்தனர். பயனுள்ள இத்தகைய ஆய்வரங்குகளை அண்மைய எதிர்காலத்தில் தொடர்ந்து நடத்த தென்காசி முஸ்லிம் நலனபிவிருத்தி சங்கம் விருப்பம் தெரிவித்தது.

சகோதரர் ராஜ் முஹம்மது, சகோதரர் ஷேக் இஸ்மாயில், சகோதரர் பஹ்ருதீன் முதலானோர் இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினர்.

# ஜாமியாவின் முன்னாள் தலைவர் ஹாஜி அபுபக்கர் மைதீன் மறைவு

சிங்கப்பூர் ஜாமியாவின் முன்னாள் தலைவர் ஹாஜி அபுபக்கர் மைதீன் அவர்கள் 10.09.2013 அன்று காலமாகிவிட்டார்கள். மறுநாள் காலை, ஜாமியாவில் நடைபெற்ற ஜனாஸா தொழுகைக்குப் பின்னர் அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

சிங்கப்பூர் ஜாமியாவின் துணைத் தலைவர் ஹாஜி எச்.எம். சலீம் மறைந்த தலைவரின் நற்பணிகளை எடுத்துரைத்தார்.

ஹாஜி அபுபக்கர் மைதீன் அவர்கள் 40 ஆண்டு காலம் ஜாமியாவின் தலைமைப்பதவி வகித்ததை நாடறியும். சிங்கப்பூர் மலாய், முஸ்லிம் சமூகம் சந்தித்துள்ள சவால்களையும் விவகாரங்களையும் தீர்க்கும் முயற்சியில் அரும்பங்காற்றிய பெருமகன் அவர்.

சமூக சேவை, சமய நடவடிக்கைகள், சமூகத்துக்கும் நாட்டுக்கும் பலன் அளித்துள்ள தொழில் முனைப்புத் துறை என பன்முனைச் சேவையாற்றியுள்ள அவர், அனைத்து முஸ்லிம் தலைவர்களுக்கும் முன்னோடி என்று அமைச்சர் யாக்கூப் இப்ராஹிம் புகழாரம் சூட்டியதை அறிவோம்.

2010ஆம் ஆண்டில் ஜாமியா தலைவர் பொறுப்பிலிருந்து அபுபக்கர் மைதீன் அவர்கள் ஓய்வுபெற்றபோது முஸ்லிம் அமைப்புகள் அளித்த பிரியாவிடை விருந்தில் அமைச்சர் உரையாற்றினார். “மனிதருள் மாணிக்கம் என்ற சொல்லுக்கு எடுத்துக்காட்டாக அமைந்தவர் அபுபக்கர் மைதீன். நற்பணிகளுக்கு அவர் அரிய முன்னுதாரணம். அவரைப்போல் இன்னொருவரைக் காண்பது அரிது!”- முன்னாள் வெளியுறவுத் துணையமைச்சர் ஜைனுல் ஆபிதீனின் பாராட்டுரை இது.

அடக்கமாக ஆரவாரம் இல்லாமல் அறப்பணியாற்றி வருபவர்களை அங்கீகாரம் தேடிவரும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர் அபுபக்கர் மைதீன். அனுகெரா ஜாஹிரி எனும் சாதனையாளர் விருது போன்றவற்றை அவர் பெற்றார்.



நல்லிணக்கப் பயணத் திட்டம் முதலான கல்வி, கலாசாரத் திட்டங்களை வெற்றிகரமாக அவர் செயல்படுத்தினார். ஹாஜி அபுபக்கர் மைதீன் அவர்களின் சிறப்புரைகள் மறக்க முடியாதவை. முன்னோர் வழியில் நாம் முன்னேற வேண்டும் என்று எடுத்துரைத்து வந்தார்.

“இந்தியாவிலிருந்து இங்கு வந்த நமது முன்னோர்கள் சிங்கப்பூரின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் பங்காற்றினர். அவர்கள் வர்த்தக தொழில்துறைகளில் வெற்றியாளர்களாகவும், கடின உழைப்பாளிகளாகவும் திகழ்ந்தனர்.

அதேசமயம், நம் முன்னோர்கள் சமூக நலனிலும் எதிர்கால முன்னேற்றத்திலும் கவனமும் அக்கறையும் செலுத்தினர். அதனால் சொத்துகளையும் உடமைகளையும் அவர்கள் மானியமாக வழங்கினர். எதிர்கால நலனுக்காக தூரநோக்குடன் பள்ளிவாசல்களையும் மதரஸாக்களையும் கட்டினார்கள்.

நம் முன்னோர்கள் அர்ப்பணிப்பு மற்றும் ஒத்துழைப்பு உணர்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினர். அவர்களிடமிருந்து இன்றைய தலைமுறையினர் படிப்பினைகளைப் பெறவேண்டும்,” முன்னோடி ஹாஜி அபுபக்கர் மைதீன் அவர்களின் நல்லுரைகள் மறக்க முடியாதவை!

# சமூக ஆர்வலர் கலைஞர் காசிம் பிரிவு

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக்கின் முன்னாள் தலைவரும் அதன்செயற்குழு உறுப்பினருமான அல்ஹாஜ் O.S. முகம்மது காசிம் காலமாகி விட்டார். சமுதாயத்தின் மேம்பாட்டிற்கு அயராது பாடுபட்ட பெருமகனார் O.S. காசிம். அவர்களின் அளப்பரிய பணியை சங்கம் நினைவு கூர்வதோடு மறைவுற்ற பெருமகனாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாக கடையநல்லூர் முஸ்லிம் லீக் அதன் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டது. கடந்த ஜூன் மாதம் அவர் உயிர்துறந்தார்.

சிங்கப்பூர் கலையுலகில் அரை நூற்றாண்டுக்கு மேலாக பணியாற்றித் தடம்பதித்த O.S. முகம்மது காசிம் அவர்களுக்கு, முன்னைய அதிபர் எஸ்.ஆர். நாதன் 2010ஆம் ஆண்டில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிச் சிறப்பித்தார்.

கலைத்துறையில் மட்டுமின்றி சமூகநலப் பணிகளிலும் காசிம் முனைந்திருந்தார். சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீகின் தலைவராகவும் சிங்கப்பூர் கலைஞர் சங்கத்தின் தலைவராகவும் 1988 முதல் 1992 வரை அவர் பொறுப்பு வகித்தார்.



காசிம் 1955ல் நாடகங்களில் நடிக்கத் தொடங்கினார். அன்றைய சிங்கப்பூர் வானொலி அவருடைய கலைத்திறனை அடையாளம் கண்டு ஒலிபரப்புச் சேவையில் ஈடுபடுத்தியது. நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களில் நடித்த அவர் 1961ல் தொலைக்காட்சி தொடங்கப் பட்டபோது அதன் நிகழ்ச்சிகளில் இடம்பெற்று வந்தார். ஏறத்தாழ ஐம்பது தொலைக்காட்சி நாடகங்களில் நடித்துள்ளதாக அவர் ஒரு பேட்டியில் தெரிவித்திருந்தார்.

அடுத்த கட்டமாக அவருடைய மேடைநாடக நடிப்புடன் நாடக இயக்குநராகவும் பொறுப்பேற்றிருந்தார். அந்த அனுபவம் 1972ல் காசிமுக்கு சிறந்த நடிகர் விருதைத் தேடித்தந்தது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு 1982ல் நாட்டின் சிறந்த நடிகருக்குரிய விருதை கலாசார துணையமைச்சர் அவருக்கு வழங்கினார். தொலைக்காட்சி நாடகத் தொடர், திரைப்படத் தயாரிப்புப் பணிகளிலும் காசிம் ஈடுபட்டார்.

---



பொங்கோல் பள்ளிவாசலுக்கான கிப்லா திசையை நிர்ணயிக்கும் நிலம் திருத்தும் பணி 31 ஆகஸ்டு 2013 அன்று நடைபெற்றது. அப்போது பொங்கோல் புதிய மஸ்ஜிதுக்கான கிப்லா திசையை முஃப்தி முடிவு செய்தார்.




# மத்திய வட்டாரப் பள்ளிவாசல்கள் ஒருங்கிணைப்பு

மத்திய வட்டாரப் பள்ளிவாசல் ஒருங்கிணைப்பு மற்றும் தொண்டூழிய அறப்பணி நிர்வாக அமைப்பின் தொடக்க நிகழ்ச்சி ஆர்ச்சர்ட் கன்ட்ரி கிளப் அரங்கில் 18 மே 2013 அன்று நடைபெற்றது. மத்திய வட்டாரத்திலுள்ள 29 பள்ளிவாசல்கள் இத்திட்டத்தில் (CMC) இணைக்கப்பட்டுள்ளன.

# இதயநோய் மருத்துவக் கருத்தரங்கு

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க சிங்கப்பூர் கிளை, 17-11-2013 அன்று இதயநோய் பற்றிய இலவச மருத்துவக் கருத்தரங்கை பீட்டி சாலையிலுள்ள சிண்டா கலையரங்கில் நடத்தியது.

சிங்கப்பூரில் நிகழும் மரணங்களில் சுமார் 32 விழுக்காடு இதயநோயால் ஏற்படுவதாகவும், ஒரு நாளைக்கு சராசரியாக 15 பேர் இதயநோயால் சிங்கப்பூரில் மரணிப்பதாகவும், மாரடைப்பு போன்ற நோய்களை எவ்வாறு தவிர்க்கலாம் என்பது பற்றியும் தெளிவாக விளக்கினார், இக்கருத்தரங்கை நடத்திய இதயநோய் மருத்துவர் திரு. ஜெயராம் லிங்கமனைக்கர்.

இதயநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கில் பொதுமக்கள் சுமார் 100 பேர் கலந்துகொண்டு, கேள்வி-பதில் அங்கத்தில் பல்வேறு பயனுள்ள கேள்விகளைக் கேட்டு பயன்பெற்றனர். சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் தலைவர் திரு. நா. ஆண்டியப்பன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

## “சட்டமும் நீங்களும்” இலவச கருத்தரங்கு

ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்க சிங்கப்பூர் கிளை, தமிழ் மொழியில் “சட்டமும் நீங்களும்” இலவச கருத்தரங்கையும் நடத்தியது. 22-09-2013 அன்று, வில்கி சாலையில் அமைந்துள்ள கப்லன் உயர்கல்வி நிலையத்தில் நடைபெற்றது.



சிங்கப்பூர் கலைப்பித்தர்கள் கழகத்தின் தலைவரும் வழக்கறிஞருமான திரு. ஆர். கலாமோகன் இக்கருத்தரங்கை நடத்தினார். முதலாளி தொழிலாளி உறவு, வர்த்தக முறைகள், சாலை விபத்து, வேலையிட விபத்து, கடன் விதிமுறைகள், உத்தரவாதக் கையெழுத்து உள்ளிட்ட பல்வேறு சட்டங்களை அவர் விளக்கினார். கேள்வி பதில் அங்கமும் இடம் பெற்றது.

சிங்கப்பூர் கடையநல்லூர் முஸ்லிம் லீக் அமைப்பின் பொதுச் செயலாளரும், சிங்கப்பூர் தமிழர் பேரவையின் துணைத்தலைவருமான சமூக சேவகர் தமிழாசிரியர் ஹாஜி மு.அ. மசூது சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். சங்கத்தின் நினைவுப்பரிசுகள் வழங்கப்பட்டன.

சிங்கப்பூரில் பணிபுரியும் ஜமால் முஹம்மது கல்லூரியின் முன்னாள் மாணவர்களும், சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களும், பொதுமக்களும், வெளி நாட்டுத் திறனாளர்களும், ஊழியர்களும் இக்கருத்தரங்கில் கலந்து பயன் பெற்றனர். 1951ஆம் ஆண்டு திருச்சியில் நிறுவப்பட்ட ஜமால் முஹம்மது கல்லூரி கடந்த 62 ஆண்டுகளாக உயர்கல்விச் சேவைகளை வழங்கி சாதனைகளைப் புரிந்து வருகிறது.